பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
27 01 2025 12 40
திங்கட்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டின் 76-வது குடியரசு தின விழாவையொட்டி வாழ்த்து தெரிவித்துள்ள உலகத் தலைவர்களுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி நன்றி தெரிவித்துள்ளார்.
- வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், மூன்று நாள் பயணமாக இன்று ஐக்கிய அரபு எமிரேட் புறப்பட்டுச் செல்கிறார்.
- தமிழகத்தில் மதுரை மாவட்டம் அரிட்டாப்பாட்டியில் டங்ஸ்டன் சுரங்க ஏலம் நிறுத்தப்பட்டதற்கு பிஜேபி மேற்கொண்ட நடவடிக்கைகளே காரணம் என்று மத்திய இணை அமைச்சர் திரு எல் முருகன் கூறியுள்ளார்.
- இணையவழி குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக ஆறு பேரை ஜார்க்கண்ட்டில் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.
- நெதர்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியின் 8-வது சுற்று முடிவில் இந்தியாவின் குகேஷ், பிரக்ஞானந்தா, உஸ்பெகிஸ்தானின் **Nodirbek Abdusattorov** ஆகியோர் முதலிடத்தில் உள்ளனர்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

நாட்டின் 76-வது குடியரசு தின விழாவையொட்டி வாழ்த்து தெரிவித்துள்ள உலகத் தலைவர்களுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி நன்றி தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மெக்ரான் வாழ்த்து தெரிவித்துள்ளதற்கு நன்றி தெரிவித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் கடந்த ஆண்டு குடியரசு தின விழாவில் அவர் கலந்து கொண்டதை நினைகூர்ந்துள்ளார்.

பாரிஸில் நடைபெறவிருக்கும் செயற்கை நுன்னணறி செயல்பாட்டு உச்சி மாநாட்டில் அவருடன் இணைந்து பங்கேற்பதை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அயர்லாந்து பிரதமர் திரு மைக்கேல் மார்ட்டினின் வாழ்த்துக்கு நன்றி தெரிவித்த பிரதமர், இரு நாடுகளும் ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை பிரதிபலிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இந்தியா – அயர்லாந்து இடையேயான உறவு மேலும் வலுபெறும் என்றும் திரு நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், மூன்று நாள் பயணமாக இன்று ஐக்கிய அரபு எமிரேட் புறப்பட்டுச் செல்கிறார்.

இந்த பயணத்தின் போது, அந்நாட்டு தலைவர்களை சந்தித்து இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தும் வகையில் இப்பயணம் அமையும் என்று தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகாகும்பமேளாவில் இன்று காலை மட்டும் 53 லட்சத்து 29 ஆயிரம் பேர் புனித நீராடியுள்ளனர்.

மகாகும்பமேளாவில் ஏராளமான மக்கள் பங்கேற்று வருவதையடுத்து இன்று முதல் அப்பகுதி போக்குவரத்தற்ற மண்டலமாக செயல்படும் என்று உத்திபிரதேச மாநில அரசு தெரிவித்துள்ளது.

மௌனி அமாவாசையையொட்டி லட்சக்கணக்கானோர் மகா கும்பமேளாவில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

இதற்கிடையே மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று மகாகும்பமேளாவில் பங்கேற்று திரிவேணி சங்கமத்தில் புனித நீராடவுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்ட நித்ய வாழ்க்கை தத்துவத்தை கும்பமேளா பிரதிபலிப்பதாகக் கூறியுள்ளார்.

இதில் பங்கேற்பதை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

**[]<<<>>>[]**

தில்லியில் வரும் ஐந்தாம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அங்கு அரசியல் கட்சிகள் தீவிரமாக பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றன.

ஆம் ஆத்மிகட்சியின் தேர்தல் அறிக்கையை அதன் ஒருங்கிணைப்பாளர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் இன்று புதுதில்லியில் வெளியிட இ.ருப்பதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

இதனிடையே தமிழகத்தில் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலையொட்டி இன்று முதல் அங்கு தேர்தல் ஆணையத்தின் மூலம் பூத் சிலிப் வழங்கப்படுகிறது.

வரும் ஒன்றாம் தேதி வரை இப்பணி நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - மூர்த்தி ) ----34 செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழகத்தில் மதுரை மாவட்டம் அரிட்டாப்பாட்டியில் டங்ஸ்டன் சுரங்க ஏலம் நிறுத்தப்பட்டதற்கு பிஜேபி மேற்கொண்ட நடவடிக்கைகளே காரணம் என்று மத்திய இணை அமைச்சர் திரு எல் முருகன் கூறியுள்ளார்.

தஞ்சாவூரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக விமானம் மூலம் திருச்சி வந்த அவர் செய்தியாளர்களிடம் பேசினார்.

சுரங்கம் அமைய உள்ள இடத்தில் புராதன சின்னங்கள் அமைந்திருப்பதாக மக்கள் அளித்த தகவலின் பேரில் பிஜேபி அதற்கான முயற்சிகளை எடுத்ததாக அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

இணையவழி குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக ஆறு பேரை காவல்துறையினர் ஜார்க்கண்ட்டில் கைது செய்துள்ளனர்.

**Jamtara** மாவட்டத்தில் அவர்களை கைது செய்ததாகவும், அவர்களிடமிருந்து மொபைல் ஃபோன்கள், சிம் கார்டுகள், ஏடிஎம் அட்டைகள், நான்கு சக்கர வாகனங்கள், ட்ரோன் கேமரா உட்பட பல சாதனங்கள் கைப்பற்றதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்த கும்பல் நாடுமுழுவதும் இணையவழி குற்றங்களில் ஈடுபட்டதாகவும், அரசு வங்கிகளின் தரவுகளை திருடியதாகவும் காவல்துறை கூறியுள்ளது.

[]<<<>>>[]

உத்ராகண்ட் மாநிலத்தில் பொது சிவில் சட்டம் இன்று முதல் அமலுக்கு வருகிறது.

இது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு புஷ்கர்சிங் தாமி தெரிவித்துள்ளார்.

இதற்கான விதிமுறைகள் அனுமதி, பயிற்சிகள் நிறைவு பெற்றிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மக்கள் அனைவருக்கும் சம உரிமை கிடைப்பதை உறுதி செய்து, சமுதாயத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தும் விதமாக இந்த சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பொது சிவில் சட்டத்திற்கு கடந்த ஆண்டு மார்ச் 12ஆம் தேதி குடியரசுத்தலைவர் ஒப்புதல் அளித்துள்ள நிலையில், அந்த சட்டத்தை அமல்படுத்தும் முதல் மாநிலமாக உத்ராகண்ட் திகழ்கிறது.

[]<<<>>>[]

இந்தியா – அமெரிக்கா இடையேயான இருதரப்பு வர்த்தகம் கடந்த டிசம்பர் மாதத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பல்வேறு புவி அரசியல் நெருக்கடிகளுக்கு இடையேயும், அமெரிக்காவிற்கான இந்தியாவின் வணிக ஏற்றுமதி எட்டு புள்ளி ஐந்து சதவீதம் அதிகரித்து, 7 பில்லியன் டாலர் அளவிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

மின்னணு சாதனங்களின் ஏற்றுமதி மட்டும் 27 புள்ளி நான்கு சதவீதம் அளவிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று அமெரிக்காவிலிருந்து பெட்ரோலியப் பொருட்கள், நிலக்கரி, மின்சார சாதனங்கள் மற்றும் பிறவகையான கருவிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த இறக்குமதி அளவு 10 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

நில முறைகேட்டில் ஈடுபட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இலங்கை முன்னாள் அதிபர் திரு மகிந்தா ராஜபக்சேயின் மகன் திரு யோசிதா ராஜபக்சே-வை கொழும்பு நீதிமன்றம் இன்று ஜாமீனில் விடுவித்துள்ளது.

சட்டவிரோ பண பரிவர்த்த்தனையில் ஈடுபட்டதாக அந்நாட்டு குற்ற விசாரணைத்துறை கடந்த சனிக்கிழமை அவரை கைது செய்தது.

[]<<<>>>[]

அமெரிக்காவில் தங்கி உள்ள கொலம்பிய நாட்டவர்களை மீண்டும் அந்நாட்டுக்கு திருப்பி அனுப்ப ஒப்புதல் அளித்துள்ளதால், கொலம்பியா மீதான இறக்குமதி வரி உயர்வை நிறுத்தி வைப்பதாக அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கொலம்பிய அகதிகளை திரும்பப்பெற அந்நாட்டு அரசு சம்மதம் தெரிவித்த காரணத்தால் அதன் மீது விதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட இறக்குமதி மீதான கூடுதல் வரி விதிப்பு நிறுத்தி வைக்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது.

கொலம்பியாவைச் சேர்ந்தவர்களை அமெரிக்க விமானப்படை விமானங்களில் கைதிகளைப்போல அனுப்பி வைப்பதை ஏற்க முடியாது என்றும், எனவே அவர்களை தமக்குச் சொந்தமான விமானங்களில் அழைத்துவர ஏற்பாடு செய்யப்படும் என்று கொலம்பியா அதிபர் திரு **Gustavo petro** நேற்று அறிவித்தார்.

[]<<<>>>[]

இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினருக்கு இடையேயான போர்நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்து காஸா பகுதிக்கு மேலும் 310 டிரக்-களில் நிவாரண உதவிப் பொருட்களை எகிப்து அனுப்பி வைத்துள்ளது.

இதில் 20 டிரக்-களில் எரிபொருட்கள் எடுத்துச் செல்லப்படுகிறது.

போர் நிறுத்தம் அமலுக்கு வந்த பின், கடந்த ஆறு நாட்களில் இதுவரை 4 ஆயிரத்து 200-க்கும் அதிகமான டிரக்-களில் காஸாவிற்கு நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மனிதநேய விவகாரங்களுக்கான ஐ.நா ஒருங்கிணைப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

நெதர்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியின் 8-வது சுற்று முடிவில் இந்தியாவின் குகேஷ், பிரக்ஞானந்தா, உஸ்பெகிஸ்தானின் **Nodirbek Abdusattorov** ஆகியோர் முதலிடத்தில் உள்ளனர்.

முன்னதாக குகேஷ் மற்றும் பிரக்ஞானந்தா இடையே நேற்று நடந்த எட்டாவது சுற்று ஆட்டம் ட்டிராவில் முடிவடைந்தது.

மற்றொரு போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி, செர்பியாவின் அலெக்சே சரானா இடையேயான ஆட்டமும் ட்டிராவில் முடிவடைந்தது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மோகன் பெஹான் அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**